Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.184/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 1 |
| | | Defence |
| | | Court |
| Name | : பாலமுருகன் | |
| Father / Husband Name | : ராமர் | |
| Village | : திருச்சுழி | |
| Taluk | : திருச்சுழி | |
| Caste | : | |
| Calling | : தலைமை காவலர் | |
| Religion | : இந்து | |
| Age | : 45 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969) on the 20.02.2026

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது திருச்சுழி காவல் நிலையத்தில் தலைமை

காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 19.02.2024 அன்று கீழப்பரளச்சி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியாற்றினேன். அன்றைய தினம் போதை பொருட்கள் தொடர்பான ரோந்து நடவடிக்கையில் நான், உதவி ஆய்வாளர் மாரியப்பன், முதல் நிலை காவலர் 4120 அன்பு ஆகியோர் தெற்குநத்தம் கிராமத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டோம். அச்சமயம் ஆஜர் எதிரியான நடராஜன் மகன் சேகர் என்பவர் தெற்குநத்தம் பகுதியில் அவருடைய வீட்டின் பின்புறத்தில் சோதனை செய்தபோது மஞ்சள் கலர் சாக்கு பை ஒன்று இருந்தது. சார்பு ஆய்வாளர், சேகர் அவர்களிடம் நானே சோதனை செய்யவா அல்லது சம்பந்தபட்ட அதிகாரிகள் சோதனை செய்யலாமா என்று கேட்ட போது நீங்களே சோதனை செய்யலாம் என என்னை அனுமதித்தார். மேற்படி சாக்கு பையை திறந்து பார்த்தபோது கனேஷ் புகையிலை 5 பாக்கெட்டுகளும், Coollip 1 பாக்கெட்டும் இருந்தது. அந்த இடத்தில் யாரும் அத்தாட்சியாக முன்வராத காரணத்தால் நானும், முதல் நிலை காவலர் 4120 அன்பு ஆகிய எங்கள் முன்னிலையில் மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றி அனுமதியில்லாமல் புகையிலை பொருட்கள் வைத்திருந்த காரணத்தினால் ஆஜர் எதிரி சேகரை கைது செய்து நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது தான் **கனேஷ் புகையிலை 5 பாக்கெட்டுகள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Coollip 1 பாக்கெட்டு சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். நான் விசாரணை நடந்த விவரத்தை கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆகி இருந்தபோதும், குறுக்கு விசாரணை செய்யாததால், குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.02.20 16:52:15 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.